ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்யதர்மம்.

புத்திரன் அனுபவித்தால் நாம் அனுபவித்ததாகவே யாகுமென்று நினைத்துத் தாய் தந்தையர்கள் புத்திரவாத்ஸல்யத்தால் பணத்தைத் தேடி வைக்கிறார்கள். பிரதிபந்தகதோஷத்தால் புத்திர லாபத்திற்குத் தடையேற்படுமானால் கர்மவியாகப் பிராயச்சித்தாதிகளைச் செய்துகொண்டாவது புத்திரனையடைய விரும்புகிறார்கள். எவ்விதத்தாலும் ஔரஸ புத்திரன் உண்டாகாவிடில் ஸ்வீகார புத்திரனையாவது எடுத்துக்கொண்டு தான் தேடிவைத்திருப்பதை அவனிடம் ஒப்புவைக்கிறார்கள். வழியோடு போகிறவன் கையில் கொடுத்துவிடுகிறதில்லை, இதிலிருந்து ஒரு இரஹஸ்யம் வெளிப்படுகின்றது. பிரத்யுபகாரத்தை யெதிர்பார்த்தே உபகாரம் செய்வது உலக வழக்கம். கொஞ்சமேனும் தனதான்யாதிகளைக் கொடுத்து உதவிபுரிவதில் பிரதிப்பிரயோஜனத்தை அபேக்ஷிப்பதாயிருந்தால் தன்னுடைய சொத்துப் பூராவையும்கொடுப்பதில் அதிகப்பிரயோஜன அபேக்ஷையிருக்கவேண்டும். அதாவது ஜன்மாந்திரத்திலும் புண்ணிய கர்மங்களால் தம்மைப் புனிதப்படுத்தவேண்டுமெனக் கருதியே. பெரியோர்கள் அவ்விதம் செய்து வந்திருக்கிறார்களென்றேற்படுகின்றது. அதையுத்தேசித்தே தான் சாஸ்திரமும் புத்திரனுண்டாவதற்குமுந்தியேகர்ப்பாதானம்முதலிய ஸம்ஸ்காரங்களை விதிக்கின்றது. உபநயநம்வரை செய்யவேண்டிய வைதிக ஸம்ஸ்காரங்களால் அதிருஷ்ட ரூபமாகவும், திரவியதானாதிகளில் திருஷ்ட ரூபமாகவும் பால்யத்தில் தனக்கு உபகரித்த பிதாவின் முதிர்ந்த வயதில் சிச்ருஷாதிகளாலும், சரீரம் விடுபட்டவுடன் செய்யவேண்டிய கிரியைகளாலும் புத்திரன் பிரத்யுபகாரம் செய்யவேண்டுமென்று சாஸ்திரத்தில் விதிக்கப்படுகின்றது. இதனாற்றான் பிதாவின் சரீரமும் புத்திரனது சரீரமும் ஒன்றென்று சாஸ்திரங்களில் வழங்கப்படுகின்றது. பிதா புத்திரர்களின் அபிமானமும் அவ்விதமாகவே காணப்படுகின்றது வியாதிமுதலியவைகளால் தன் சரீரமே தனது கார்யங்களுக்கு உதவாமல் போய்விடுவதுபோல் சிலவிடங்களில் பிதா புத்திரர்கள் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளாமல் விரோதப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் காணப்படுகிறார்கள் இப்படியெல்லாம் நேருவதுபூர்வஜன்மபாபவசத்தாலாமென்பது சாஸ்திரத்தின் கருத்து. பூர்வ யுகங்களில் பெரியோர்களது சரித்திரம் இவ்விதமாக இருந்ததில்லையென்பது இதிஹாஸ புராணங்களில் வெளிப்படை. தற்காலத்தில் புத்திரனுக்குச் செய்யவேண்டிய காரியங்களைப் பிதாசரிவர செய்யாததால் புத்திரனும் பிதாவுக்கு சரியானபடி வயது காலத்தில் திருஷ்டமாகவுமுபகரிப்பதில்லை அதிருஷ்ட ரூபமாகவுமுபகரிப்பதில்லை. இவ்வாறு ஸம்பந்தம்விட்டுப்போவதால் சிலபிள்ளைகள் மதாந்தரபிரவேசத்தையும் செய்து விடுகிறார்கள். இப்படியெல்லாம் விபரீதமாக நேர்ந்துவிடாமல் நம்மதாசாரியர்கள் காட்டிய வழியிலேயே நடந்து நம்மதம் நீடித்து நிலைத்திருக்கும்படிசெய்து யாவரும் சுகப்படுவார்களாக.

சுபம் !

பத்திராதிபர்.

ஸ்ரீ:

உ

# ஆர்ய தர்மம்.

பிரமோத-ஸூ கார்த்திகைமீ ௧௨வ

## திருச்சி அத்வைத சபை.

### மதாசாரியர்களும்— மத நிலைமையும்.

நாளது கார்த்திகைமீ 5வ திருச்சி அத்வைத ஸபையில் திருவாதி—ப்ரம்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்கள் மேல்கண்ட விஷயமாய் அரியதோர் உபன்யாஸம் செய்தார்கள். அதன் ஸாராம்சமாவது,—ஒவ்வொரு மனிதனுக்கும் மதாபிமானமென்பது இயற்கையாயமைந்துள்ளதே. ஆகையால் ஸநாதன தர்மியாயிருக்கும் ஒவ்வொருவனுக்கும்பிறப்பதற்குமுந்தியே மதஸம்பந்தமேற்பட்டு விடுகிறதாம். அதெப்படியெனில்—புத்திரனுண்டாவதற்கும், மற்றுமுள்ள புத்திரனது சிரேயஸ்ஸுக்காகவும் பிதாவினால் செய்யப்படும் கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களை புத்திரனுக்குள்ள ஸம்ஸ்காரமாக சாஸ்திரம் விதிப்பதிலிருந்து இந்த இரஹஸ்யம் வெளியாகிறது மந்திர பூர்வகமாக அவை செய்யப்படுவதிலிருந்தே பிதாகொண்டிருந்த மதத்தின் ஸம்பந்தம் புத்திரனுக்குமேற்பட்டதாகவே மத நிலைமை கெடாமல் நம்முன்னோர்களிடம் வளங்கிவந்தது. காலக்கிரமத்தால் அந்த ஸம்ஸ்காரங்கள் உள்ளபடி நடைபெறாமல் போவதிலிருந்து மத நிலைமையும் மாறுதலையடையும்படியாக நேர்ந்துவிட்டதுபோலும். மாதா, பிதா, ஆசாரியன் இவர்களே முதன்மையாக மதாசார்யராவார்கள். அன்னையின் ஸ்தந்யத்தை யருந்தும் காலத்திலெல்லாம் சிசு அன்னையோடேயிருப்பதால் அன்னையினுபதேசத்திலிருந்து இலகுவாக தெய்வபக்தி, பெரியாரிடம் வணக்கம் முதலிய நற்குணங்கள் உற்பவிக்கின்றன. பிற்பாடு பிதாவின் உபதேசத்திலிருந்து இஷ்ட தேவதைகளை வழிபட சில ஸ்தோத்திராதிகளும் படிக்கும் அப்பியாஸமுமுண்டாய் விடுகிறது. பிறகு உபநயனமானவுடன் ஆசார்யனருகில் செய்யப்படும் வேதவித்தியாப்பியாஸத்திலிருந்து

மதாஹஸ்யங்கள் நன்றாயறியப்படுகின்றன. ஆகவே மாதா பிதா ஆசார்யன் மதாசார்யராவார்கள். பிருஹதாரண்ணியத்திலும் சைவினி என்பவர் கூறியது பிரமாணிகமாயுள்ளதெனக் கூறுவதற்காக, மாதா, பிதா, ஆசாரியன் இவர்களின் உபதேசம் பெற்றவர் கூறுவதுபோலிருக்கிறதெனக் கொண்டாடப்படுகின்றது, தெரிந்தவர்களானாலும், தெரியாதவர்களானாலும் வைதிகமான கார்யங்களைச் செய்யும்பொழுது உபாத்தியாயராக ஒருவரை வைத்துக்கொள்ளுகிறோமல்லவா? அவருமோர் மதாசாரியராவார். அவர்களும் தற்போது தங்கள் பதவியை நன்றாய்பாதுகாத்துக் கொள்ளாமையால் நம்மதாசார நிலைமை குன்றியதுபோல் காணப்படுகின்றது. அவர்கள் இனிமேலாவது தங்கள் பதவியைப் பரிபாலித்து வந்தார்களானால் நம்மதம் முன்போலவே நிலைக்கும் இவர்களையும் ஸதாசார நிலையில் நிருத்தும்படியான மடாதிபதிகளான ஆசார்ய புருஷர்களும் மதாசாரியாளாமென்பது யாவருமறிந்த விஷயம். அம்மஹான்களுடைய பராமற்சத்திற்றான் நமது ஸநாதனமதம் இக்கலியிலும் தலையெடுத்து வருகின்றது. அந்த ஆசார்ய பரம்பரையிலிருந்து ஸாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தியவ்ஸரமாயிருந்த பரமேசுவரனே எல்லோருக்குமாதியான மதாசாரியனும். ஆகையால் ஸர்வ பிராணிகளும் பரமேசுவரன் முதல் மாதா பிதாக்கள்வரையுள்ள மதாசாரியர்களின் நல்ல உபதேசத்தைக்கேட்டு ஸதாசாரத்திலேயே நிலைபெற்று இஹபரசிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம். பத்திராதிபர்.

---

## நையாயிகருக்கும் வேதாந்திக்கும் ஸம்பாஷணை.

### அநிர்வசனீயமான விசேடம்.

(550-வது பக்கத்தொடர்ச்சி.)

மேலும் இக்குடம் அக்குடத்தின் வேறென்பதுளதனாலெனக் கேட்டவுடன் அணுவரையில் ஓடித்திரியாது இங்கே அனிர்வசனீய விசேஷத்தால் எனத்தலைப்பது எவ்வளவு அனுகூலம், உமக்குக் குடம் முதலிய எல்லாப்பொருள்களும் அனிர்வசனீய அனந்தகோடி விசேஷங்களால் வேற்றுமைப்பட்ட பல

அணுக்களின் பரம்பரையில் தோன்றின. அணுக்களின் தர்மமோ அனிர்வசனீயமாம், அதுவே பரம காரணமாம், காரியங்களும் அதன்வழி தோன்றியமையால் அனிர்வசனீயமே. இது உமது மதப்படி எமக்கு கண்ணுக்குத்தோன்றும் வஸ்துக்கள் அனிர்வசனீயங்களே. பிரம்மமும் அனிர்வசனீயமே, பிர்ம்மத்துக்கு தர்மமேதுமில்லையாதலின் அநுசவர்துனினீயம். உலகமோ பல தர்மங்கள் மாறப்பெறுதலாலும் ஒன்றினிடத்தே பல தர்மங்கள் தோன்றி நிற்றலாலும் அவை அனிர்வசனீயமே ஒப்சோதகரே! அனிர்வசனீயமான பதார்த்தமில்லையென்றீரே. சொப்பனத்தில் தோன்றும் இலக்கணமென்ன? அதற்குக் காரணம் எது? அனிர்வசனீயமேயன்றோ? அதனாலேயேதான் ஞாய சாஸ்திரத்தில் வேற்றுமைக்கும் வேற்றுமையின் விவகாரத்திற்கும் அனிர்வசனீய வாதபாத சேவையன்றி வேறு கதியில்லையென்றார் கண்டனக்காரர். மேலும் ஓர் விசித்திரத்தைப்பாரும். குடம் முதல் விசேஷம்வரைத் தோன்றும் காரண பரம்பரையில் தோன்றிவரும் வேற்றுமை வேற்றுமையென்ற குணமா? ஒன்றின் ஒன்றின்மையென்ற அபாவமா? குணமென்றால் அது விசேடத்திலிடமிராது. குணம் முதலியவையெலாம் நிர்க்குணங்களாதலின், அது பாவமானால் அது வேறு பாவப்பொருளை வேறுபடுத்தும். ஆனால் இரண்டு விசேஷங்களின் மேற்றுமைப்பட்டும் நிர்வகிப்பது முடியாது. வெண்ணிறமுள்ள குடத்திலும் படத்திலும் வெண்மையின் வேற்றுமை எவ்விதமெனின், இடவேற்றுமையாலென வேண்டும். எவ்விடம் எவ்விதமாய் வேறுபட்டதெனின் விசேஷம்வரை ஓடவேண்டும். இறுதியில் அனிர்வசனீய விசேடத்தின் காலில் விழவேண்டும். இங்ஙனமே இரண்டு தொழில்களின் வேற்றுமையும் இடம்பற்றிச் சொல்லவேண்டும். ஒரே பொருளில்ஒரு குணமும் ஒருதொழிலும் எள்ளையாடுகிறதென்று அனுபவிக்கப்படுதலால், சேர்ந்திட்டால் அவ்விரண்டும் எதனால் வேறுபட்டதெனின் இடவேற்றுமையைச் சொல்லாது அவற்றின் ஜாதி வேற்றுமையைச் சொல்லவேண்டும், அவைகளின் வேற்றுமை எதனாலெனின் அதின் சுபாவமேயென்று வாயை மூடுவார். உன் சாதியைக்கண்டு ஒரு ஜாதி மற்றொரு ஜாதியில் மேற்றுமை பெற்றது எதனாலெனின் இடவேற்றுமையால் அல்லது சுரூபத்தாலென்பீர். முதல்வழியில் இடவேற்றுமைக்கு எது, ஓர் தர்மபேதம் சொல்லவேண்டும். தர்மபேதத்திற்கு இடவேற்றுமையும்

இடவேற்றுமைக்குத் தர்மபேதமும் காரணமானால் ஒன்றையொன்று பற்றும். அதன் சுபாவமென்பதும் அனிர்வசனீயமென்பதும் வேறில்லை. இடவேற்றுமை அவ்வணமானால் அதனிடத்துள்ள விசேஷமப்படியே. இவ்வணம் விசேடங்களும் சமவாயங்களும் அபாவங்களும் ஆதலால் ஏழு பதார்த்தங்களும் அனிர்வசனீயமாய் முடிந்திருக்க, பிரம்மம் உள்பட அனிர்வசனீயமென்றொப்பவேண்டிய நீர் பிரமம் ஒழிய மற்றதை அனிர்வசனீயமென்ற என்னைப்பரிஹசிப்பதுமாமோ? உண்மையை ஆராய்ந்திடும் என்று உபதேசித்தான்.

ஆரியன்.

---

# ப ஞ் சா ங் க ப ரி சி ல ன ம்.

பண்டித சிகாமணிகளான ஆரியர்காள! இச்சிறியவிண்ணப்பத்தை யாதரவுடன் கவனியுங்கள், கஞ்சபுரம் பஞ்சாங்கமென்று பிரசித்திபெற்றுவரும் பஞ்சாங்கங்களொன்றற்கொன்றுள்ளமாறுபாடு பலவாய்ப் புலப்படுகின்றன மாறுபட்ட திதி முதலியவைகளால் நிறைந்த பஞ்சாங்கங்கள் பத்துக்குமேலென்கைவச மிருக்கின்றன. அவைகளுள் கஞ்சபுரம் பஞ்சாங்கமேயதிகமாய்க் காணப்படுகின்றன. அவைகளிலதிக மாறுபாடுள்ளன. இதனுளெஃதனுஷ்டிக்கற்பாலதென நன்பான ஒருவர் கேட்கின்றனர். கிரீடையினிமித்தம் குழிகளாலமைக்கப்பட்ட மணற்சோற்றில் கல்விலக்குவதுபோல அசக்கியமும் ஆன்றோர்கள் பரிஹஸிக்கத் தக்கதுமாவதுபற்றி அப்பஞ்சாங்களுளிஃதிஃதயே யநுட்டிக்கற்பாலதென நிர்ணயிக்க யான் முயலவில்லை. ஆனாலிங்கு நமது நண்பரறியவிரும்புவது திருக்கணித பஞ்சாங்கத்திற்கு மூலம் யாதென்பதே. ஆதலின் இக்கதைச் சற்று யாமறிந்தவண்ணம் நிரூபிப்பாம்.

ஓ நமது நண்பரே! கஞ்சபுரம் பெயரமைந்த பஞ்சாங்கம் முற்றிலும் மூலமில்லாததென்றும் வியவஸ்தை கெட்டதென்றும் அறிய வரிய மூலகர்த்தரைப் பெற்றதென்றும் நீரேயிங்கு நிர்ணயித்தது மெய்யன்றோ. ஆனதுபற்றியேவியவஸ்தையில்லாத வவைகளுளொன்றேனு மநுட்டிக்க வுரியதன்று. இப்பஞ்சாங்கத்துக்

கொப்பானப்பாஹித கணிதவழியமைத்த பஞ்சாங்கத்தினதிபர்கள் சிலரிப்பொழுதுபுலப்படுகின்றனர். அவர்களும்முற்றுப்பெருகதும் வியவஸ்தை யின்மையும் பொருந்திய மூலத்தையே யடைந்தவர் திருக்சித்த பஞ்சாங்கத்தினது மூலம் முற்றிலும் பிரமாணவசனங் களுட னிங்குரைக்கத் தேவையன்று. அதற்குமூலமிருக்கட்டும் அல்ல தில்லாமற்று னிருக்கட்டும், சிரத்தையுள்ள வறிவின் மிக் கோர்களால் முதலிற் கவனிக்கப்படவேண்டிய விஷயமாவது விய வஸ்தை யிலாதாற் றீமையினையும். நன்மையினையும் வியவஸ்தை யுளதாலென்பதே. திருக்சித்த கணிதங்களுள் அவ்வியவஸ்தை யென்பதின்றி யொருவழிப்பட் டுளதென்பது யாவர்க்குமெளிதி லறியற்கூடியதே. ஆனதுபற்றியே ஆன்றோர்களா லிங்கு மூல மொன்றேயென்று நினைக்கற்பாலது. கணிதசித்தாந்தத்தினுள் யேத்தம் அல்லது அவ்யக்தகணிதத்தா லெதற்காவதொன்றற் கேற்பட்டுள்ளபலமானது காலத்திலாவது தேசத்தாலாவது வேரு கத்திரியமாட்டாதல்லவா. இப்போது எட்டோடு நான்குமட்டுஞ் சேர்ந்து பன்னிரண்டாக வுளது. முன்னமாவது வேறு தேயத் திலாவது சற்றேறக் குறையவுங்கூட வொருக்காலும் மாறுதல்ல வா, ஆனதுபற்றியே யல்லவோ கணிதத்தைச் சித்தாந்தமெனக் விருதுகின்றனர். சித்தாந்த நூலிலிப்போது தென்படுகிற சித்தாந் தங்களுள் மிகப் பிராசீனமானது சூரியசித்தாந்தமெனும் புத்தக மே. சமீபகாலத்திலியற்றப்பட்டவைகளுள் மிகச்சிறந்தது சித் தாந்த சிரோமணி யென்பதாம். பிராசீன பாஸ்கர நவீன பாஸ்கரர் களாலியற்றப்பட்டுள்ள விவ்விரண்டிற்கு மிடையிடையே இன் னும் சில புஸ்தகங்களு மிருக்கக்கூடும். அவைகளுள் சூரியசித்தாந் தம் முதலிய கிரந்தங்களி லெவ்வழி கணிதத்துக் கூறப்பட்டுள தோ வதுவே திருக்சித்த கணிதத்திற்கு மூலமாம். ப்ராசீனர் களான பாஹித கணிதவருக்காரர்கட்கு மதுவே மூலமாக விருக்க வுரியது. ஆனு லதி லிதுவே பேதமாகும். யாதெனின், பூர்விகச் சோதிடக்ஞர்களிடத்துச் சோதிடசாத்திலுள்ள பாண்டித்தியம் நிறைந்துளது. அவர்கள் மிகவு நன்றுகக் கிரஹங்களைப் பரிசோ தித்துப் பிரபந்தங்களை இயற்றினர். மத்தியகாலத்திலுள்ளவர்களு மப்படியே. இக்காலத்தவர்கட்கு மூலமான சோதிடநூற் பழக்க மின்மைபற்றின் காலத்தால் மாறிய கிரஹங்களது கதியின் பேத உணர்ச்சிப் பாண்டித்தியங் குன்றியது, அல்லது குனியமாகிவிட்

டது என்பதே. ஆதலின்மூலம் பழையமாதிரியாக ஏற்படாமல் வியவஸ்தையற்றதாக விளங்குகிறது. திருக்ஸித்தபஞ்சாங்க கணகர்களோவெனின், சிறந்த சோதிட நூல்முற்றிலும் நன்கறிந்தவர்களும், 'சர்வக்கிரதங்களையும் சோதிப்பவர்களாகவுமிருப்பதுபற்றி பிரத்தியக்ஷத்திற்கும் சோதிட நூலுக்கு மொற்றுமையைச் சம்பாதிக்கின்றார்கள்.

அதினிமித்தமே வெகுகாலமாகச் சீர்திருத்தப்படாத வெகுகாலமாய்ப் பிரசுரிக்கப்பட்டுவருகிற தஞ்சபுரமென்னும் பிரசித்தியடைந்த பஞ்சாங்ககணகர்களது கணிதத்தைக் காட்டிலுமிதில் மிகுந்த பேதமுண்டாகின்றது. இதனாலேயே நமக்கதன்மூலம் அறியப்படாததுபோலவாகிறது. ஆகையால் சூரியஸித்தாந்தம் முதலிய க்ரந்தங்களையே மூலமாகவுடையது. இப்போது சோதகர்களால் நன்றாகச் சீர்திருத்தப்பட்டதும், பிரத்தியக்ஷத்திற்கும் சாத்திரத்திற்குமொற்று ஆக்கப்பட்ட மாக்கமானது நமது பூர்விக புண்ய புருஷோத்தமர்களால் கண்டறியப்பட்ட ரீதியேயிஃதென்றிவ்வளவே இங்குறைக்கவேண்டியது. ஆயின் இவ்விஷயத்திற் பிராசீனமென்னும் பிடிவாதத்தால்மாத்திரம் ஸம்சயமுற்றவர்கள் பலரிருப்பினும் பக்ஷபாதமின்றிப் பரிசீலனை பண்ணுவாரேல் திருக்ஸித்தமான பஞ்சாங்கமே யனுஷ்டிக்கத்தக்கதெனப் பண்டிதர்கள் நிச்சயமாயங்கீகரிப்பார்கள் என்றெண்ணுகிறேன் என்று இவ்விதம் எனது சம்மதமான சிறிது விஷயமிஃது நண்பரே சிறந்தோரான உமக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சுபம்.

---

# அயன விஷு புண்யகாலங்கள்.

உத்தராயன தக்ஷிணாயன புண்யகாலங்களும் சைத்ர துலா விஷுக்களும் முறையே தை, ஆடி, சித்திரை, அற்பசி மாதப் பிறப்புகளில் இப்பொழுது அனுஷ்டிக்கப்படுகின்றன. வான சாஸ்திரத்தையும் இவ்வழக்கத்தையும் ஒப்பிட்டால் இருப்பது ஒன்று நடப்பது ஒன்றாய் முடிகின்றது. இவ்வாறு ஆசரிப்பது அசாஸ்திரீயமென்றே யாம் கூறுவோம்.

## வான சாஸ்திரம்.

இவ்வரிய சாஸ்திரத்தை நன்கு கற்றுத் தேர்ந்தவர் மிகச் சிலரேயாவர். பஞ்சாங்கம் கணிக்கின்ற கணகர்கூட இதனை முற்றிலும் கற்றவரல்லவென்றே சொல்வோம். அக்ஷம், கிராந்தி, கதம்பம், அயநாம்சம், வியதீபாதம், சரம், யோகம் க்ஷணம் முதலிய பல பரிபாஷைகள் இன்னின்னவையென அறியாமலே ஸகாவாக்யம் என்ற பழையகணக்கைப்பார்த்துப் பஞ்சாங்கம் பிரசரிப்பவர் நம் நாட்டில் கணகர்களாகக் கருதப்படுகின்றனர். இடைச்சி ஒருத்தியின் தலையிலிருந்த தயிர்ச்சட்டி வானம் இடித்து அது உடைந்ததால் அப்பதிவ்ரதை கோபங்கொண்டு "எட்டு ஏணி வைத்தாலும் எட்டாமல் உயர்வாய்" எனச் சபித்தனள் எனவும் அதுகாரணம் பற்றியே வானமும் அதில் விளங்குகிற சூர்யசந்த்ர கிரக நக்ஷத்ராதிகளும் நெடுந்தூரம் உயர்ந்தன, எனவும் குழந்தைகளுக்குச் சொல்கிற சிறு கதையை உண்மையாகக் கொள்வோருமுளரே!

ஆவணி அவிட்டம் (சிராவணம்) நடைபெறுகிற தினத்தின்று ஏனைய சாஸ்த்ர படனங்களோடு வான சாஸ்திரமும் சேர்த்து உபதேதிக்கப்படுகின்றது. பண்டைக்காலத்து எல்லாச் சாஸ்திரங்களும் மாண்டன. அவ்வாறு கணிதமும் காலகதி அடைந்து விட்டது!

### விஷு.

வருஷத்துக்கு இரண்டு நாட்களில் சூரியனது நேரான கிரணங்கள் பூமியின் மத்தியாகிய நிரக்ஷப்ராந்தங்களில் விழுகின்றன. அப்பொழுது உலகெலாம் இராப்பகல் சமனோமாகும். அஃதே விஷு புண்யகாலமாம்.

### அயனம்.

மேற்குறித்த கிரணங்கள் பூமியின் மத்தியிலிருந்து உத்தராயனத்தில் வடக்கு நோக்கியும். தக்ஷிணாயனத்தில் தென்திசை நோக்கியும் நகர்ந்து செல்லுகின்றன. இவ்வாறு பூமத்திக்கு வடக்கிலும் தெற்கிலும் $23\frac{1}{2}$ பாகம் வரையில் அவை சென்று மாறி மாறி பூமத்தியைத் தொடுகின்றன. வடக்கில் $23\frac{1}{2}$ பாகம்தொடும் பொழுது உத்தராயணத்தின் முடிவென்றும் தெற்கில் தக்ஷிணாயணத்தின் முடிவென்றும் நிர்ணயிக்கப்படவேண்டும். பூமத்திக்கு

வடக்கில் வசிக்கிற நமக்கு உத்தராயணத்தில் அதிகப்பகலும் தக்ஷிணாயனத்தில் குறைந்த பகலும் ஸம்பவிக்கும் விஷயம் பஞ்சாங்கத்திலுள்ள அஹர்மானம் என்ற பகல் நேரத்தைக் கவனித்தால் புலப்படும். இதனால், அதிகப் பகலுள்ள கடைசிநாள் தக்ஷிணாயன புண்யகாலமாகவும், குறைந்த பகல்களின் கடைசிதினம் உத்தராயன புண்யகாலமாகவும் இருத்தல்வேண்டும். இவைதான் அயன புண்யகாலங்கள்.

## ஸங்க்ரமணம்.

வான வட்டம் 12 ராசிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பன்னிரண்டு ராசிகளிலும் ஒவ்வொன்றாக சூர்யன் நுழையுங்காலங்கள் மாதப்பிறப்பிறப்புகளாகிற ஸங்க்ரமண புண்யகாலங்கள். இவற்றோடு மேற்குறித்த விஷு 2 அயனம் 2 சேர்த்தால் மொத்தம் 16 புண்யகாலங்களாகின்றன. ஒருவன் தன்முன்னோரைக் குறித்துச் செய்யவேண்டிய சடங்குகள் வருஷத்துக்கு 96(ஷண்ணவதி) என ஸ்மிருதிகள் வற்புறுத்துகின்றன. இந்த சிராத்தங்களில் 16 என்ற இலக்கம் சேர்க்கவேண்டியிருப்பதால் மாதப்பிறப்புகள் 12 அயனவிஷுக்கள் 4 தனித்தனியே அநுஷ்டிக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கின்றோம்.

## சரியான புண்யகாலங்கள்.

இவ்வாறு இருக்க, அயனபுண்யகாலங்கள் தை, ஆடி மாதப்பிறப்புகளிலும் விஷுக்கள் சித்திரை அற்பசி மாதப்பிறப்புகளிலும் அநுஷ்டிக்கப்படுவது முழுமையும் தவறாகும். இவை பகல் நேரம் பற்றிவருவன என முன்னமே விளக்கியுள்ளோம். ஆகவே குறைந்தபகல் அதிகப்படுகிற மார்கழி 10௨ வாக்கில் உத்தராண புண்யகாலமும் அதிக பகல் குறைந்துவரத் தொடங்குகிற ஆனிமீ 10௨ வாக்கில் தக்ஷிணாயன புண்யகாலமும், பகல் இரவு சமபாகமாக 30 நாழிகையுள்ள பங்குனி புரட்டாசி மாதங்களின் 10௨ வாக்குகளில் சைத்ர துலா விஷுபுண்யகாலங்களும் அநுஷ்டிக்கப்படவேண்டும். பல ஆண்டுகள் செல்லச் செல்ல இச்சம்பவங்கள் மாறிவரும். அதனைக் கீழ் குறிக்கின்றோம்:—.

## அயன கதி.

ஸங்க்ரமணஸ்தானங்கள் வானத்தில் எக்காலத்திலும்வேறாக நகருவதில்லை, பகலிரவு நேரங்கள் மாத்திரம் மாறுபாடடைகின்

றன. இதற்கு அயனகதியே முதற்காரணம். அதனை அயனும் சம் எனவும் கூறுவர்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் விளங்கிய வான சாஸ்த்ர நிபுணர்கள் சூர்யனுடைய நேரான கிரணங்கள் பூமத்தியில் விழுகிற காலத்தைக் கண்டறிந்து அதனைச்சித்திரை மாதப்பிறப்பாகக் கொண்டனர். அஃதே சைத்ர விஷுவாக அநுஷ்டிக்கப்பட்டது இப்பால் அத்தகைய பங்குனி 10உ வாக்கில் நிகழ்வதை பாடசாலை மாணவரும் அறிவர். அயனம் என்பது வானத்தில் மாறுபடக்கூடிய ஓர் இடம். ஆண்டு 1-க்கு விகலை5 வீதம் மாறுபடும். ராசி 1-க்கு 10,8000 விகலைகள். இவ்வாறாதலின் அயனவிஷு புண்ய காலங்களும் மாறுபட வேண்டியன நாம் கூறுகிறோம்.

आत्रेयः

---

## ஸ்ரீ மீனாக்ஷி பரிணயம்.

### யுத்தமுயற்சியென்ற இரண்டாவது (அலை)தரங்கம்.

பிறகு அகஸ்தியர் இக்குமாரிக்கு, தங்கத்தோடு சேர்த்து, பாலோடுகலந்த மதுரமான தேனைக்கொடுத்தார். அக்குமாரி, தாயாரின் ஸ்தனத்தில் சிறிது முகத்தை வைத்து இன்பமுற்றவளானாள். அன்னையோவெனில் பெண்ணின் முகாரவிந்தத்தைக் கண்ணால் அருந்தி, போதும் என்று திருப்தியடையவில்லை. பாண்டியராஜன் அவளுக்கு ஆகாயவார்த்தையாலிடப்பட்ட, தடாகா என்ற பெயரை இட்டான். அக்குழவி ஆகாயத்தில் காண்பிக்கப்படும் சந்திரகலையை உற்றுப்பார்த்து 'இந்த புஷ்பத்தை தலையில் வை' என்று அடிக்கடி மொழிந்தாள். பிறகும பெண்ணுக்கு அக்ஷராப்பியாஸம் செய்விப்பதற்கு, மலயத்வஜன் குலகுருவுக்குக் கட்டளையிட்டான். அப்பெண், அறியாதவள்போல் பூமியில் சிரமப்பட்டு ஒவ்வொரு எழுத்தையும் எழுதத் தொடங்கினாள். அப்போது எல்லாக்கலைகளுமே, தோழிமார்கள்போல் நான்முந்தி நான்முந்தியென்று இவளையடைந்தன. தெரிந்ததையும் தெரியாததையும் இப்பெண்ணிடமிருந்தே, நிலையாகத்தீர்மானித்து நிடப்

படுத்திக்கொண்டு, அகத்தியர் குரு தக்ஷிணையாகப் பெற்றார். வாள், வஜ்ஜிரம், கதை, வில், சக்தி, ப்ரமரகம், தோமரம், பிண்டி பாலம், சூலம் இவைகளால் போரில் திறமையைக் காட்டிக் கொண்டு, அப்பெண் விளையாட்டுப்போரில் வீரலக்ஷ்மியோடு விளையாடினள்.

பிறகு கிரமமாக இவளுடைய ஒவ்வொரு அங்கத்தையும், மூவுலகிற்கும் மங்களகாமான யௌவனப் பர்வம் அலங்கரித்தது: அவள் பாலலீலையைச் சிதறவிட்டாள். வெட்கத்தை வெளிப்படுத்னாள். இளமைப்பர்வம் நழுவவும், யௌவனப்பர்வம் தொடங்கவே ஸகல ரஹஸ்யங்களையுமறிந்த அப்பெண், தகப்பனருக்கு மந்திராலோசனை செய்வதில் முதன்மைபெற்றவளும், பரம்பொருளை சிந்திப்பதில் பரமகுருவாகவும் ஆனாள். பாண்டியராஜன் பெண்ணிடம் இவ்வுலகம் மேலுலகம் ஆகிய இரண்டின் பாரத்தையும் ஒப்புவித்து மோக்ஷத்தைக் காட்டிலும் இல்வாழ்க்கையையே மேலாகக்கருதி நாட்களைக் கழித்தான்.

அவன் ஒரு ஸமயத்தில் மந்திரியை அருகில் அமரச்செய்து, காஞ்சனமாலையும் குமாரியும் பக்கத்தில் இருக்கும்போது, தனது மனதிலுள்ள இந்த விஷயத்தைக் கூறலானன்—ஸுமதியே; இவ்வரசு, பெரியோர்களின் ஆசிகளாலும், உனது புத்திவன்மையாலும் நிலைநாட்டப்பட்டது, பெண்ணும் இளமை பர்வம் நீங்கி ஆழி சூழ்ந்த பூமண்டலத்தைப் பரிபாலனஞ்செய்யத்தக்க வயதிலிருக்கிறாள். ஆனாலும் 'இவள் மணம்புரியவில்லை' என்று எனது இஷ்டம் பூர்ணமாகவில்லை. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் இவளுக்கேற்ற கணவன் ஒருவனும் தோன்றவில்லை. அவ்விதமான எனது கோரிக்கையை சந்திரமௌளியான சுந்தரேசர் சீக்கிரத்திலேயே பயன் படுத்துவார். ஏற்படப்போகின்ற தடாதகையின் விவாஹ கார்யத்தில் தாயாரே ஸ்வதந்திரமாகப்போகிறாள். குமாரியால் கரையேற்றப்பட்டகுலம் பார்க்கப்பட்டது. 'லோகமாதாவின் பதத்தைச் சேரவேண்டும்' என்ற இந்த ஒன்றே எனது முக்கியமான மனோபீஷ்டம்—என்று.

இவ்விதம் பாண்டியராஜன் கூறிமுடிக்கவே, பட்டமஹிஷியும் உடன்கட்டையேறுவதில் உறுதிகொள்ளவே, ஸுமதி, தடாதகா இவ்விருவரும் ஸஹிக்கமுடியாத பெருந்துக்கத்தால் மயங்கி

னவர்களானர்கள். அப்போது குலகுருவான அகத்தியர், தான் கிட்டவந்து அவர்களைப் பார்த்து இவ்விதம் சொன்னார்-தாயாரே, 'ஜயிக்கக்கடவாய், மூவுலகாலும் வணங்கப்பெற்றவளே; ஜயிக்கக் கடவாய், மானிடத்தன்மையின் அபிப்ராயத்தைத் தள்ளிவிட்டு, இறந்தப்பிராயனும் சாணம் புகுந்தவனுமான இந்தப் பாண்டியனை கடைக்கண்களால்பார். விவாஹ கார்யத்தில் உன்னைக் கொடுப்பதற்காகத் தாயாரைக் கட்டாயப்படுத்து. இக்காஞ்சனமாலை பார்வதியைக்கொடுக்கும் புண்ணிய ராசியால் புருஷனுக்குத்தனது கடனை நீக்கிக்கொள்ளட்டும்—என்று.

இவ்விதம் அறிவிக்கப்பட்ட அந்த தடாதகாதேவி, தகப்னைமேலான ஸ்தானத்தில் வைப்பதற்குஎண்ணங்கொண்டாள். பிறகு மலயத்வஜன், புயத்தை தனது தெய்வமான மீனாக்ஷியின் புயங்களிலும் ஐசுவரியத்தை நேத்திரத்தின் அருகிலும், மனதையும் உயிரையும் இருசாணங்களிலும் வைத்து, பயம் நீங்கினவனுனன். பிறகு குமாரியின் அனுக்ரஹத்தால் அப்பாண்டியன் சந்திரமௌளியின் கர்ப்பக் கிரஹத்தில் பிரவேசிக்கும்பொழுது, ஸகல ஜனங்களும் கண்குளிரப் பார்த்தனர். பிறகு அகத்தியர் பதியின் விரஹத்தால் மூர்ச்சைகொண்ட தாயைத்தழுவி, வருந்துகின்ற அம்பிகையை சமாதானப்படுத்தினர். பிறகு அவள் குலகுருவின் கட்டளையில் பிற்பாடுசெய்ய வேண்டியவைகளை முடித்து ஸகலபாபங்களையும் தொலைக்கின்ற கடைக்கண்களால் சுமதியையும் தாயாரையும் அனுக்ரஹித்தாள்.

பிறகும் உலகத்திற்கு மங்களத்தைத் தரக்கூடிய முகூர்த்தத்தில் மந்திரிகளோடும் உபாத்தியாயரோடும் சந்திரமௌளியின் ஸமீபத்தை அடைந்துரத்னங்கள் பதிப்பிக்கப்பெற்றஸிம்மாஸனத்தில் அம்பாள் ஏற்றப்பட்டாள். அந்த மீனாக்ஷி லக்ஷ்மீதேவியை எல்லாப் பொக்கிஷ சாலைகளிலும், ஸரஸ்வதிதேவியை ஸம்சய ஸ்தானங்களிலும்,, அன்னபூர்ணியை சமயல் அறைகளிலும், வீரலக்ஷ்மியை யானை, குதிரை இவைகளின் ஸ்தானங்களிலும் அதிகாரிகளாக நியமித்தாள். அவள் அரசாளும்பொழுது தனலக்ஷ்மி கஜலக்ஷ்மி முதலான லக்ஷ்மிகளும், எல்லாக் கல்விகளும் சரீரம் எடுத்துக்கொண்டு பணிவிடை 'செய்யும் அதிகாரத்தை வஹித்தனர்.

பிறகு அபிஷேகம்செய்யப்பெற்ற ராஜகுமாரியை சத்ரு ஜயத்தில் ஊக்கத்தை அளிப்பதற்கு, வழிதோறும் சேற்றால் அழுக்குற்ற தேசங்களை, வற்றச் செய்துகொண்டு சரத்காலம் அணுகிற்று, விருக்ஷங்கள், மலைகள், மருப்பிரதேசங்கள், கடல்கள் என்ற விசேஷமில்லாதபடி, உலகம் யாவற்றையுமே ஜலமயமாகச்செய்து, எங்கும் ஸ்வச்சமாக ஆனமேகங்கள், கீர்த்தியைத் தேடினவைகள்போலாயின. தாமரையோடை விருத்தியாயிற்று. ஜலம்தெளிந்தது. மிக்கத்தெளிவான சந்திரிகை விளங்கிற்று.

அப்போது பாண்டிய குமாரி, தாயாரைத் தனது பீடத்தில் அமர்த்தி, அவளது சரண பீடத்தில் உட்கார்ந்து, மந்திரியான ஸுமதியோடு, ஜயம்பெறுவதற்காக இவ்விதம் ஆலோசித்தாள்— சுமதியே; யாதொரு நீ முன்பு சரத்காலந்தோறும் ஜயத்தை நாடிக்கொண்டு, பிதாவைத் தூண்டினையோ அந்த நீ இவள்சிறுமி என்று ஐயங்கொண்டா என்னைத் தூண்டவில்லை—என்று பிறகு காஞ்சனமாலை குழந்தாய்! இவ்விதம் சொல்லவேண்டாம், மந்திரியால் நமக்கு ஜயம் ஏற்படப்போகின்றது, அவனேவென்றால் ஸகல கார்யத்தையும் அறிகிறான் என்று சொன்னாள், அந்த சுமதியோவெனில், குழந்தாய் நான்சொல்வதைக்கேள். நீ எதைச் சொன்னாயோ அது என்னிடத்தில் அநுக்கிரஹிப்பதற்கு எண்ணமே. உண்மையாகவே ஜயம்பெறுவதில் யத்தனிக்கவேண்டியதுதான். இவ்விஷயத்தில் முதலில் காரணம் சத்துரு. நான் தேடிப்பார்த்தும் அப்படி ஒரு சத்துருவையும் காணவில்லை. ஆகையால் உன்னிடம் நான் ஒன்றும் விஞ்ஞாபித்துக் கொள்ளவில்லை. என்று சொன்னான்.

அப்போது அகஸ்தியர் அணுகி, ஆசிகளைக்கூறி, அவளைப் பார்த்துக் கூறியதாவது-குழந்தாய்! நீ விவாகத்தை உடனேயே செய்யப்போகின்றாய் எவ்வாற்றாலும் உனது விஜய யாத்திரை ஏற்படட்டும். இந்த பூமி, எங்கும் உனது பாலனமான சுற்றுவதால்மிக்கபுண்ணியம் பெற்றதாக ஆகட்டும்—என்று. அவ்விதம் சொல்லியும் அம்மீனாக்ஷியின் பாணிக்கிரஹணத்தைப் பார்ப்பதில் ஆவல்கொண்ட அவ்வகத்தியர், ஜயம் என்ற முஹூர்த்தத்தில் சேனையோடு கூடின அவளை பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள தோட்டத்தில் பிரவேசிக்கச்செய்து, மலய மலையை அடைந்தார், பிறகு ஸுமதி, சேனைகள்யாவும் ஸஜ்ஜமாக்கப்பட்டன. ஆனால்

இவ்விரவையிங்கு கழித்துவிட்டு, திரும்பச்செய்யவேண்டியவர்களைத் திருப்பிவிட்டு நாளையதினம் பயணப்படு என்று அம்பாளிடம் கூறினான். அந்த மீனாக்ஷி, இரவு பூராவாகவும் தாயாரோடு பேசிக்கொண்டு, ஐந்தாறு கணங்கள்போலுள்ள இரவை கோழி கூவுதலால் விடிந்ததாக எண்ணினாள். பிறகு உயரக்கொடிகள் பறக்கவிடப்பட்டதும், தயாரான யுத்த வீரர்களையுடையதும்; ஸஜ்ஜங்களான கஜம், அச்வம், ரதம் இவைகளையுடையதுமான இவளுடைய ஸகலசேனையும் நிமிஷத்தில் தயாராயிற்று. அவள் திசைகளைவெல்வதற்காக அன்னையால் மங்களாசாஸனம் செய்யப்பட்டு,பல்லக்கில்ஏறிக்கொண்டுஸகலசேனையையும்முன்னால்செலுத்திவெளிக்கிளம்பினாள். முன்னால் யுத்தவீரர்களின் கூட்டங்களாலும், பிறகு பரிகளாலும், பிறகு கஜங்களாலும், பிறகு தேர்களாலும், வேலையாட்களாலும், அவளுக்கு அருகில் பல்லக்கின்முன்பு ஸ்துதிபாடகர்களாலும் போகப்பட்டது. அவளுக்குமுன்பு பெண்கள் அரசருக்கு அடையாளங்களான இரத்தினம் பதித்த தங்கப்பிரம்புகளாலும், வீணை, டமரு, குழல், மிருதங்கம் இவைகளாலும் கத்திய பத்தியங்களை படிப்பதாலும் சேவித்தனர்.

அம்மீனாக்ஷியின் அவ்வளவு சேனையும், நெருக்கமான வழியில் மெதுவாக சென்றுகொண்டு, பக்கத்தில் ஓடியும் நகரவில்லை, வழியிலுள்ள பழங்களையும் கரும்புகளையும் எடுக்கவில்லை. சம்பாப் பயிர்களில் இறங்கும் விஷயத்தில் கேட்பானேன்? காற்றடித்து அணுகின பூவின் மணத்தையும், இம்மீனாக்ஷியினிடம் பயந்தே முகர்ந்தது. முகக்காற்றால் கடல்களை ஊதுவோமா என்ன? நகங்களால் மலைக்கூட்டங்களைக் கிள்ளி எறியுவோமா என்ன? என்று அங்கு சேனைத் தலைவர்களால் எண்ணப்பட்டது. எவ்வளவுக்குள் கதிரவன் நடு உச்சியில் ஏறினானோ, அவ்வளவுக்குள்ளேயே, களைப்பாறுவதற்காக ஸுமதி சேனைக்குக் கட்டளையிட்டான். தென்னை, பலா, பாக்கு, மா இவைகளோடு பொருமை கொண்ட வாழைத்தோட்டம் கரும்புத்தோட்டம் இவைகளோடு கூடின காவேரியின் எல்லைப் புறத்தில் ஏற்படுத்தப்பட்ட கூடாரங்களில், சேனாதிபர்கள் பிரவேசித்தனர், அம்மீனாக்ஷியும் கடைக்கண்களால் சேனைகளை அனுக்ரகித்து, ஸுமதியாலேற்படுத்தப்பட்ட கூடாரத்தில் நுழைந்தாள். பிரவேசித்து சுமதியை அனுப்பிவிட்டு, தோழிமார்களின் வழிநடந்த களைப்பைப் போக்கினாள்

அத்தடாகத்தை, காவேரியின் ஜலத்தில்நீராடி தோழிமார்களோடு சேர்ந்து விளையாடினள். அவளது ஆஞ்ஞையால் ஸுமதியின் (பலம்) சேனை ஜேணம் அவிழ்த்துக் களைப்பாற்றப்பட்ட அச்வங்களோடு கூடினதும், கட்டவிழ்த்து சுகமடைந்த கஜக்கூட்டங்களையுடையதும், நீராடி நீருண்டு சுகமாய் உறங்கின படர்களோடு கூடியதுமாயிற்று.

பிறகு அவள் மறுநாளில், குதிரை சவாரி செய்துகொண்டு காவேரியின் வனப்பைப் பார்த்துப்பார்த்து, திருப்தி அடையவில்லை. அங்கு நதியின் ரூபமாக பரிணமித்தவளும், அகத்தியரின் மனைவியுமான அக்காவேரியை கௌரவப்படுத்திக்கொண்டு, 'இவள் நமது குருவின் பத்தினியல்லவா' என்று தோழிகளுக்கும் திடமான ஆதரவை உண்டுபண்ணினள். பரிமிதமான சேனையோடுகூட அம்மீனுக்ஷிதேவி, கூடாரத்தை சுற்றிவந்து ஸாயங்காலத்தில் கூடாரத்தை அடைந்தாள். பயணமான தேவியை, வழியில் சேவித்து வருகின்ற சுமதி ஒருவனே, பாராக்காரனுகவும், மந்திரியாகவும், படனுகவும் வெகுவாக விளங்கினன்,

பிறகு அம்மீனுக்ஷிதேவி திக்விஜயத்திற்குப் பயணப்பட்டதைச் செவியுற்று, சரணத்தை விரும்பின மன்னர்கள், தனங்களையும் வாகனங்களையும் வெகுமதியாகத் தந்து, சுமதியால் ஜாடை காட்டப்பட்டு, இம்மீனுக்ஷியின் பாதபீடத்தின் அருகில் வணங்கினுர்கள். பயப்படாதீர்கள். சுகமாகத் திரும்பிச்செல்லுங்கள்' என்று பூஷணங்களால் இவர்களை வெகுமானித்து, போர்செய்யப் பின் தொடர்ந்தவர்களைப் கூடாரத்தில் நுழைவதற்குக் கட்டளையிட்டாள்.

யுத்தமுயற்சியென்ற இரண்டாவது தரங்கம் முற்றிற்று.

## பாரதாதிவர்ஷ விஜயம் என்ற மூன்ருவது தரங்கம்.

பிறகும் அப்பாண்டியகுமாரீ, காலையில்பெண்களின் ஸ்தோத்திர பாடங்களால் விழிப்படைந்து நித்தியகன்மாநுஷ்டானத்தை முடித்து சுமதியால் தயார் செய்யப்பட்ட சேனையை பயணப்படுத்தி, வேந்தர்களின், கூட்டத்தால் பின் தொடரப்பட்டுப், பயணமானள். வழியில் பல வெகுமதிகளை முன்னுல்வைத்து வந்துகொண்டும், வணங்கிக்கொண்டும், இனிய மொழிகளைப் பேசிக்கொண்டும் இருக்கின்ற அரசர்களுக்கு, அநுக்கிரஹஞ்செய்வதில்

மதுரா நாயகிக்கு மிருந்தத் தாமதமேற்பட்டது. சக்ரவர்த்தியின் திருமகளான அம்மீனாக்ஷி, ராஜ்ஜிய லக்ஷ்மியை, நமஸ்காரஞ் செய்கின்ற கொற்றவர்களிடத்திலும், இரத்தினங்களையும் தங்கக் குவியல்களையும் வேதியர்களிடத்திலும், கீர்த்தியையும் பிரதாபத்தையும் திசைகளின்முகங்களிலும், இறைத்துக்கொண்டுசென்றாள்.

பிறகு இந்த மீனாக்ஷிதேவியின் சேனாமுகத்தில் விஜயக்கொடியான பெரியமீன் விளங்கிற்று. தோழிமார்களால் சூழப்பட்ட ராஜகுமாரியானவள், தகப்பன் பாட்டன் முறையாக ஆளப்பட்டு வந்த பூமியின் எல்லைக்கு அலங்காரமாயுள்ள பனிமலையை அடைந்தாள். அவள் பனிமலையின் கொடிமுடியிலிருந்து பூமியில் விழுந்து, கணகலத்திற்கு நாற்புறமும் பெருகுகின்ற கங்கையைக் கண்டு தான் முன்பிறவியிலேற்பட்ட உடன் பிறப்பால் மனமுருகினவளானாள். சுமதி, மாயாபூரியின் பக்கத்தில் இந்த சேனையை நிறுத்தி, கங்கையின் அலைகளால் இழுக்கப்பட்ட கண்ணையுடைய பாண்டிய குமாரியை, இவ்விதம் சொல்லத்தொடங்கினான்—தாயே; பாரதவர்ஷபூமி இவ்வளவுதான். இந்த பூமிதான் உமது குல பரம்பரையாகவந்தது, பரிசுத்தமான தீர்த்தத்தோடு கூடினபோதிலும் இந்நதியை நீராடுவதால் பாவனமாக்கிவிட்டு, மறுபடியும் இங்கிருந்து சேனையைத் திருப்புவது உசிதம்—என்று

அப்போது இந்தமீனாக்ஷி அவனைப்பார்த்துகூறியதாவது சுமதியே; கங்கையைக் குறித்து எப்படிக்கூறினாயோ அப்படியே இருக்கட்டும்; அடையப்பட்டதை திடப்படுத்துவதால் மட்டும் ஏற்படும் கீர்த்தியோவெனில் யோசிக்குமிடத்து அபகீர்த்தியை நீக்குவது மட்டிலுமேயாகிறது, ஆகையால் இக்கங்கையில் நீராடிவிட்டு, உன்னைமட்டிலும் துணையாகவைத்துக்கொண்டு, இச்சேனையைஇங்கேயேநிறுத்தி பரிமிதமானசேனையோடு, தேவர்களாலும், சித்தர்களாலும் சேவிக்கப்பட்ட இதாவர்ஷங்களை வசப்படுத்துவேன்—என்று. பிறகு சுமதி உமது திருவடிகளை சேவிப்பவர்களுக்கு விண்ணுலகம் கையிலிருக்கும்போது, பூமண்டலத்தையாக்கிரமிப்பதிலும் என்ன சங்கை? பின்தொடர்கின்ற இந்த சேனை உனக்கு உதவிபுரிவதற்காக என்ன? ஆனாலும் சேனைதள்ளத்தக்கதல்ல—என்று சமயோசிதமாகச் சொன்னான். (தொடரும்)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.